DECEMBER 2022 **U/ID 30619/ULA3A**

Time : Three hours Maximum : 75marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை தருக.

1. நற்றிணை-சிறுகுறிப்பு தருக.

2. நீலநாகம் கொடுத்த அறிய ஆடையை சிவபெருமானுக்கு வழங்கிய மன்னன் யார்?

3. நாலடியார்-குறிப்பு வரைக.

4. 'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்று சிறப்பிக்கப்படும் நூல்கள் எவை?

5. மாதவியின் தோழி யார்?

6. திருக்குறளைப் போற்றும் நூல் யாது?

7. சிலப்பதிகாரம்-குடிமக்கள் காப்பியம் எனக் கூறக் காரணம் யாது?

8. சீவகனின் வளர்ப்புத் தந்தை யார்?

9. பெரியபுராணத்திற்கு சேக்கிழார் இட்ட பெயர் என்ன?

10. கம்பராமாயண காண்டங்கள் எத்தனை?

11. சீர் என்றால் என்ன?

12. அணி-பொருள் விளக்கம் தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும்
200 சொற்களில் விடை தருக.

13. எட்டுத்தொகை நூல்களில் புறநூல்கள் குறித்து விளக்குக.

14. கடைஏழு வள்ளல்கள் யாவர்? அவர்களை விளக்கி எழுதுக.

15. நாலடியாரின் சிறப்புக்களை விளக்குக.

16. சிலம்பில் காணப்படும் நடுகல் வழிபாடு குறித்து விளக்குக.

17. கம்பராமாயணத்தில் கம்பர் வெளிப்படுத்திய காட்சியுணர்வினை எடுத்துரைக்க.

18. வெண்பாவின் பொது இலக்கணத்தை விளக்குக.

19. தளை-வகைகளை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு மட்டும்
500 சொற்களில் விடை தருக.

20. பட்டினப்பாலை கூறும் சோழநாட்டின் சிறப்பினை விவரி.

21. நாலடியார் கூறும் அறக்கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

22. மணிமேகலை ஓர் சீர்திருத்த காப்பியம்- நிறுவுக.

23. கம்பராமாயண காப்பியச் சிறப்பினை விவரி.

24. யாப்பிலக்கண அடிப்படை விதிகளை விவரிக்க.

———————